பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 02 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - செஷல்ஸ் இடையேயான நல்லுறவு, பொன்விழாவை கொண்டாடும் தருணத்தில் அந்நாட்டு அதிபரின் வருகை அமைந்திருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மகாராஷ்டிர மாநில நகராட்சித் தேர்தலில் பிஜேபி கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

3. இந்தியா - கிரீஸ் இடையே இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புக்கான திட்டம் பரிமாறிக்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4. டிஜிட்டல் மோசடிகளை எதிர்கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குமாறு மத்திய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

5. உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுடன் பாகிஸ்தான் அணி விளையாட அந்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - செஷல்ஸ் உடனான நல்லுறவு, பொன்விழாவை கொண்டாடும் தருணத்தில் அந்நாட்டு அதிபரின் வருகை அமைந்திருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள செஷல்ஸ் அதிபர் திரு. **Patric Herminie**-க்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் திருமதி திரௌபதி முர்மு விருந்தளித்து கௌரவித்தார்.

அவரை வரவேற்றுப் பேசிய குடியரசுத்தலைவர் பண்முகத்தன்மை மற்றும் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இந்தியாவும்-செஷல்சும் பல்வேறு தகவல்களை பரிமாறிக் கொண்டதாகவும், இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள அந்நாட்டுடன் ஆழமான கலாச்சார உறவுகளை இந்தியா கொண்டிருப்பதாகவும் கூறினார்.

வளர்ச்சிக்கான பொருளாதார உறவுகள், இருதரப்பு பாதுகாப்பு போன்றவற்றில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தியா செயலாற்றி வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநில நகராட்சித் தேர்தலில் பிஜேபி கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்கள் மகாயுதி கூட்டணியின் நல்லாட்சியை விரும்புவதாகவும், அதன் காரணமாகவே இந்த வெற்றி சாத்தியமானதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தின் புகழ்மிக்க கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையிலும் இந்த வெற்றி அமைந்திருப்பதாகவும், இதற்காக களத்தில் அயராது பாடுபட்ட கட்சித் தொண்டர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவிப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - கிரீஸ் இடையே இருதரப்பு ராணுவ ஒத்துழைப்புக்கான திட்டம் பரிமாறிக்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு தளவாட துறையில்

ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான கூட்டு பிரகடனம் கையெழுத்திடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

குருகிராமில் உள்ள இந்தியப் பெருங்கடல் பகுதியின் தகவல் மையத்தில் கிரீஸ் நாட்டின் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார் என்ற அறிவிப்பை இந்தியா வரவேற்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

திருப்பதி - ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இடையே வாரத்திற்கு 3 நாட்கள் இயக்கப்பட்டு வந்த ரயில் சேவையை 4 நாட்களாக அதிகரிக்க உத்தரவிட்ட பிரதமருக்கும், ரயில்வே அமைச்சருக்கும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் நாட்கள் ரயில் சேவை வழங்க தாம் கடிதம் எழுதியிருந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

டிஜிட்டல் மோசடிகளை எதிர்கொள்ள சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி நிலையான வழிகாட்டு

நெறிமுறைகளை உருவாக்குமாறு மத்திய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

டிஜிட்டல் அடிப்படையிலான மோசடிகள் மற்றும் கைது குறித்த சம்பவங்கள் அதிகரித்து வருவது கவலையளிப்பதாக தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமயிலான அமர்வு தெரிவித்துள்ளது.

சுமார் 54 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு டிஜிட்டல் மோசடிகள் நடைபெற்றிருப்பதாக வெளியாகியுள்ள தகவலை நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுபோன்ற கணினி அடிப்படையிலான மோசடிகளை தடுப்பதற்கு வங்கிகள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வங்கி வாடிக்கையாளர்களிடம் டிஜிட்டல் மோசடி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது வங்கிகளின் கடமை என்றும், ரிசர்வ் வங்கி, தொலைதொடர்புத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் ஆலோசனை நடத்தி மோசடிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

<<<<>>>>

இந்தியா - மொரீஷியஸ் இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.

நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம், தம்முடன் தொலைபேசியில் பேசியபோது இதனைத் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு வாரணாசியில் அவரை சந்தித்தது முதல் தற்போது வரை இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விரிவாக விவாதித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான ஒற்றுமை, மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட உறவுகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டதாக அவர் அதில் கூறியுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்ந்து நீடிப்பதற்கு இரு நாடுகளும் பணியாற்றுவது என்றும் ஆலோசிக்கப்பட்டதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டுக்கு இந்தியா வரும் திரு. ராம்கூலத்தை வரவேற்பதை

தாம் எதிர்நோக்கி இருப்பதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

மக்களவை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக குறை கூறினார்.

மக்களவைத் தலைவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் காரணமாக, எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<>>>>

நல்லாட்சி, டிஜிட்டல் சீர்திருத்தங்கள் போன்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நடவடிக்கைகள் காரணமாக இந்தியா நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைந்து வருவதாக மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

நாகாலாந்து மாநிலம் கோஹிமாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவிட் பெருந்தொற்று காலத்திலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையாக நீடித்து வந்ததை சுட்டிக்காட்டினார்.

பல்வேறு நாடுகளின் வளர்ச்சி எதிர்மறையான நிலையை சந்தித்த போதிலும் தகவல் தொழில்நுட்பத்தை அதிக அளவில் பயன்படுத்தியதாலும் பல்வேறு அமைச்சகங்களின் வலுவான செயல்பாட்டினாலும் இந்தியா முன்னேற்றத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பதாக திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

தாய்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் திரு. Anutin Charnvirakul தலைமையிலான Bhumjaithai கட்சி ஆட்சியமைக்க கூடிய வைகையில் பெரும்பான்மை பெற்றுள்ளது.

94 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் மொத்தம் 500 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் Bhumjaithai கட்சி 174 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக மக்கள் கட்சி 87 இடங்களிலும், Pheu Thai கட்சி 58 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

<<<<>>>>

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுடன் பாகிஸ்தான் அணி விளையாட அந்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் போட்டியில் இந்தியா பங்கேற்கும் ஆட்டங்களில் விளையாடப் போவதில்லை என ஏற்கனவே பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்திருந்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நிர்வாகத்துடன் ஐ.சி.சி. நடத்திய பேச்சுவார்த்தையில் இந்தியாவுடன் விளையாடுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நட்பு நாடுகளின் கோரிக்கையை ஏற்று இந்த முடிவை எடுத்திருப்பதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே அகமதாபாதில் நேற்று நடைபெற்ற கனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா 57 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

-------------

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-1 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Petr Bar Biyukov - Llia Simakin** இணையை வென்றது.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் சசிகுமார் முகுந்த் - இங்கிலாந்தின் **Joy Clarke** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**